Name of the Newspaper: Hindu Tamil Date: 25-5-18

## சென்னை சென்ட்ரல் – நேரு பூங்கா, சின்னமலை – டிஎம்எஸ் இடையே

# மெட்ரோ ரயிலை முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்

● சென்ட்ரலில் இருந்து விமான நிலையத்துக்கு ரூ.70 கட்டணம் நிர்ணயம்

■ சென்னை

சென்னை சென்ட்ரல் - நேரு பூங்கா, சின்னமலை - டிஎம்எஸ் இடையே புதிய மெட்ரோ ரயில்சேவை இன்று தொடங்கப்படுகிறது. எழும்பூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் முதல்வர் கே.பழனிசாமி கலந்துகொண்டு இதைத் தொடங்கி வைக்கிறார்.

சென்னையில் 2 வழித்தடங்களில் மொத்தம் 45 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 28 கி.மீ. தூரத்துக்கான பணிகள் முடிந்து மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையே நேரு பூங்கா, எழும்பூர், சென்ட்ரல் (2.7 கி.மீ) மற்றும் சின்னமலை - டிஎம்எஸ் (4.5 கி.மீ) வழித்தடங்களில் மெட்ரோ ரயில்களை இயக்க ரயில்வே பாதுகாப்பு ஆணையர் (தெற்கு) ஏ.கே.மனோகரன் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்நிலையில் மேற்கண்ட 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவையை முதல்வர் கே.பழனிசாமி மற்றும் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி ஆகியோர் இன்று மதியம் 12.30 மணி அளவில் தொடங்கி வைக்கின்றனர். இதே போல், சுரங்கப்பாதையில் அமைக்கப்பட்டுள்ள சென்ட்ரல், எழும்பூர் மற்றும் சைதாப்பேட்டை, நந்தனம், தேனாம்பேட்டை, டிஎம்எஸ் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களையும் அவர்கள் திறந்து வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் பன்னீர்செல்வம் மற்றும் மத்திய, மாநில அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.





▲ சென்னை சென்ட்ரல் - நேரு பூங்கா, சின்னமலை - டிஎம்எஸ் இடையேயான புதிய மெட்ரோ ரயில் சேவையை முதல்வர் கே.பழனிசாமி இன்று தொடங்கி வைக்கிறார். திறப்பு விழாவுக்குத் தயார் நிலையில் உள்ள எழும்பூர் மெட்ரோ ரயில் நிலையம். (அடுத்த படம்) தேனாம்பேட்டையில் உள்ள ஏ.ஜி - டிஎம்எஸ் மெட்ரோ ரயில் நிலையம். படங்கள்: ம.பிரபு

### கட்டண விவரம்

சென்ட்ரலில் இருந்து விமான நிலையத்துக்கு ரூ.70, எழும்பூரில் இருந்து விமான நிலையத்துக்கு ரூ.60, டிஎம்எஸ்ஸில் இருந்து விமான நிலையத்துக்கு ரூ.50 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### நெரிசல் இன்றி..

புதிய மெட்ரோ ரயில் சேவை தொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகளிடம் கேட்டபோது, “சென்ட்ரல் - நேரு பூங்கா இடையே 25-ம் தேதி (இன்று) மெட்ரோ ரயில்சேவை தொடங்க உள்ளதால் மக்கள் போக்குவரத்து நெரிசல் இன்றி, சொகுசாக மெட்ரோ ரயில்களில் பயணம் செய்ய முடியும். சென்ட்ரலில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையத்துக்கு 45 நிமிடங்களில் செல்லலாம்.

இதுவே, அண்ணாசாலையில் பணிகள் முடித்து, மெட்ரோ ரயில் சேவை தொடங்கும்போது இதை விட விரைவாக செல்ல முடியும்” என்றனர்.